**பாரதிய ஜனதா கட்சி**
**(மத்திய அலுவலகம்)**
**11, அசோக் சாலை, புதுடெல்லி- 110001**
**தொலைபேசி: 23005700;தொலைநகல்: 23005787**

**<u>பாஜகவின் தேசிய துணைத் தலைவர் திரு.முக்தர் அப்பாஸ் நக்வி விடுத்த செய்தி அறிக்கை</u>**

புதுடெல்லி,27,பிப்ரவரி

மார்ச் ஒன்றாம் தேதி, பாரதிய ஜனதா கட்சி தனது தேசிய கவுன்சில் மற்றும் தேசிய செயற்குழு கூட்டத்தை நடத்தவுள்ளது.

கட்சியின் தேசிய செயற்குழுக் கூட்ட மார்ச் ஒன்றாம் தேதி அன்றும் தேசிய கவுன்சில் கூட்டம் அடுத்த நாளான 2 ஆம் தேதியிலும் நடக்கும் என்று பாஜக துணைத் தலைவர் திரு.முக்தர் அப்பாஸ் நக்வி கூறினார்.

கட்சித் தலைவர் ராஜ்நாத் சிங்கின் உரையுடன் இக்கூட்டம் தொடங்கும் என்றும், அந்தக் கூட்டத்தில் நாட்டின் பொருளாதார, சமூக மற்றும் அரசியல் பிரச்னைகள் பேசப்படும் என்றும் முக்தர் அப்பாஸ் நக்வி கூறியுள்ளார்.

தேசிய செயற்குழுக் கூட்டத்தில் நான்கு விவாதக் கூட்டங்களாக இருக்கும். தேசிய கவுன்சில் கூட்டம் 9 அம்சங்கள் விவாதப் பொருட்களாக இருக்கும். ‘சுஷான் சங்கல்ப் பிஜேபி விகல்ப்’ என்ற கோஷத்தோடு அடுத்த தேர்தலுக்கான உத்திகளை வகுப்பது தொடர்பாக அந்த மூன்று நாட்களில் விவாதிக்கப்படும்.

நாடு எதிர்கொண்டுவரும் சமூக, அரசியல் நிலையும், சந்தித்துவரும் சவால்களும் தேசிய கவுன்சில் மற்றும் பொதுக்குழுவில் பேசப்பட உள்ளதாகத் திரு. நக்வி தெரிவித்தார். ஊழல், லஞ்ச விவகாரங்கள், உள்நாட்டுப் பாதுகாப்பு, தேசியப் பாதுகாப்பு ஆகியவையும் பேசப்படும். அந்த்யோதயா திட்டம் பற்றியும் நல்ல நிர்வாகம் குறித்தும் அலசப்பட உள்ளதாக அவர் கூறியுள்ளார்.

வர இருக்கும் பொதுத் தேர்தலுக்கான உத்திகள் மற்றும் தயாரிப்புகள் குறித்த விஷயங்கள் இந்தக் கூட்டத்தில் முடிவுகளாக எடுக்கப்படும்.

சுஷான் சங்கல்ப் பிஜேபி விகல்ப் என்ற தாரக மந்திரத்துடன் கட்சித் தொண்டர்கள், பாஜகவுக்கு பொதுமக்களிடையே ஆதரவைப் பெறுவதற்கு போர்க்கால அடிப்படையில் வலியுறுத்தப்படுவார்கள்.

தேசிய கவுன்சிலைச் சேர்ந்த அனைத்து உறுப்பினர்கள், தேசிய செயற்குழு உறுப்பினர்கள், மக்களவை மற்றும் மாநிலங்களவை உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், மாநில கட்சி ஊழியர்கள், தேசிய மோர்ச்சா ஒருங்கிணைப்பாளர்கள், அனைத்து மாவட்டத் தலைவர்கள் மற்றும் பொதுச் செயலாளர்கள், பாஜகவின் மேயர்கள், மாவட்டப் பஞ்சாயத்து தலைவர்கள் மற்றும் அமைப்புச் செயலர்கள் அனைவரும் தேசிய கவுன்சிலில் பங்கேற்க வேண்டும். தேசிய செயற்குழுக் கூட்டம் என்டிஎம்சி கன்வென்ஷன் மையத்தில் நடக்கும். தேசியக் கவுன்சில் புதுடெல்லியில் உள்ள டல்கட்டோரா மைதான உள்விளையாட்டு அரங்கத்தில் நடைபெறும்.

(ஓ.பி.கோஹ்லி)
தலைமை நிலையப் பொறுப்பாளர்